விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அருப்புக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், அதாவது, பாளையம்பட்டி மற்றும் பாளையம்பட்டி விரிவாக்கப் பகுதிகள் மற்றும் உடையனாதபுரம், வேலாயுதபுரம், கோடம்பட்டி, குருந்தமடம் போன்ற பகுதிகளிலெல்லாம் தார்ச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. மேலும், பழுதடைந்திருக்கிற சாலைகளைச் செப்பனிடுவதற்கும் கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே, இப்பணிகளையெல்லாம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு நடந்துகொண்டிருக்கக்கூடிய இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

கால்நடை மருத்துவமனை

***36216—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, தெத்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 டிசம்பர் 5]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, தெத்தூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு கால்நடைக் கிளை நிலையம் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கால்நடை மருத்துவமனை கேட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே கால்நடை மருந்தகம் வர வேண்டுமென்று சொன்னால், கால்நடைத் துறை விதியின்படி, 5,000 கால்நடைகளுக்குமேல் இருக்க வேண்டும். அங்கு ஆய்வு செய்து பார்த்ததில் 5,500–க்கு மேலாக கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு வருகின்ற நிதியாண்டில் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

தமிழக விவசாயிகளின் துயர் துடைத்திட முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திடச் செய்தும், 4—12—2014 அன்று முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த தீர்மானம் நிறைவேற்றி, காவேரி நதிநீர்ப் பிரச்சினையை நடுவர் நீதிமன்றத்தில் வாதிட்டு, அரசு கெசட்டில் இடம்பெறச் செய்தும், டெல்டா மாவட்ட விவசாய மக்கள் மனங்களில் நிரந்தர இடம் பெற்றவரும், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர்கள்தம் மறுவாழ்விற்காக சட்டமன்றத்தில் தனித் தீர்மானம் நிறைவேற்றியும், மீனவர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வினை ஏற்படுத்த உரு கொண்டிருப்பவரும், தமிழகச் சொத்தான கச்சத் தீவை மீட்பதற்கு இரவு, பகலாக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற நல்லாட்சியில், மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட தெத்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2013-ல் பெரியகுளம் தொகுதி, எருமலைநாயக்கன்பட்டியில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் துவக்க வேண்டுமென்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அந்தப் பணிகளுக்கு உத்தரவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டும் நினைவுபடுத்தினேன். ஆனால், அந்தப் பணிகள் இன்னும் அங்கே துவக்கப்படாமல் இருக்கின்றன. அதுகுறித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, 50 கால்நடைக் கிளை நிலையங்கள் புதிதாக அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதிலே தங்களுடைய தொகுதியிலுள்ள எருமலைநாயக்கன்பட்டி சேர்க்கப்பட்டுள்ளது. மிக விரைவிலே அரசாணை வெளியிடப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*